<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருக்கோவிலூர்.</u>

<u>முதலேற்பு வழக்கு எண்.297/2018</u>

<u>2026 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19 ம் நாள் புதன்கிழமை</u>

பிரதிவாதிகள் தரப்பில் சாட்சி சாந்தா (**பி.சா.3**) ன் முதன்மை பிரமாண வாக்குமூலம்,

1969 ம் ஆண்டு 44 வது பிரமாண சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திருமதி.ப.பிரசன்னா, பி.ஏ., எல்.எல்.பி., இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | சாந்தா (**பி.சா.3**) | ஜாதி : | |
| கணவர் பெயர் | கன்னையன் | சமயம் : | |
| கிராமம் : | வடியாங்குப்பம் கிராமம் | வயது : | 60 |
| தாலுக்கா : | திருக்கோவிலூர் | தொழில் : | |

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் 3 ம் நபர் ஆவேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என உறுதியளிக்கிறேன். பிரதிவாதிகள் தரப்பில் சாட்சி பி.சா.3 பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அவரது முதன்மை விசாரணை சாட்சியமாக பதிவு செய்யப்படுகிறது. ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வழக்கு சொத்தானஅரசு புறம் போக்கு சொத்தின் சர்வே எண், விஸ்திரணம் தெரியுமா என்றால் தெரியாது. புறம்போக்கு சொத்திற்கு பக்கத்தில் எனக்கு ஏதேனும் இடம் உள்ளதா என்றால், பூர்வீக சொத்து வழக்கு சொத்திற்கு கொஞ்சம் தூரம் தள்ளி உள்ளது. வழக்கு சொத்திற்கு தெற்கால் வேணுக்கும், வேணு மகனுக்கும் சொத்து உள்ளதா என்றால் உள்ளது. 10 வருடங்களுக்கு முன்பு பட்டுவேல் என்பவிரிடமிருந்து 2 ஏக்கர் நிலம் வாதி வாங்கியுள்ளாரா என்றால், வாங்கியுள்ளார். எனக்கும், வேணுக்கும் அங்கு பூர்வீகு சொத்து உள்ளதா என்றால், இல்லை. வழக்குச் சொத்தான புறம்போக்கு சொத்தில் பிரதிவாதிகளான சேவாத்தாள், அன்னபூரணியும் வழக்கு சொத்தான மாட்டு கொட்டகை அமைத்து, ஆடு, மாடுகள் கட்டியும், வைக்கோல்போர் போட்டு கொண்டும், மரங்களை வெட்டிக்கொண்டும் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். வாதிக்கு, நான் அண்ணி உறவுமுறை என்று சொன்னால் சரிதான். சொத்து சம்மந்தமாக எனக்கும், வாதிக்கும் இடையே பிரச்சினை உள்ளதால், பிரதிவாதிக்கு சாதமாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**என்னால் சாட்சியம் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புதலளிக்கப்பட்டது.**
**நாள்: 19.08.2026**

**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**திருக்கோவிலூர்.**